புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஈழத்தமிழரும் இந்தியக் குடியுரிமையும்

**லா. உமா ரோஸ்லின்**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண்: 22212014022008
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏபி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி
தூத்துக்குடி .
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, -12,

**முனைவர்.சு . மேரி சுபா செல்வராணி,**
ஆய்வு நெறியாளர்
**உதவிப் பேராசிரியர்,**
**முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்**
**ஏ.பி. சி,மகாலட்சுமி மகளிர் கல்லூரி,**
**தூத்துக்குடி-2.**

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்வில் புலம் பெயர்வு என்பது தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாகமாறிவிட்டது. இந்தப் புலம்பெயர்வு பல்வேறு காரணங்களுக்காக நடைபெற்று வருகின்றது. அதில் இனக் கலவரம் காரணமாக இலங்கை தமிழர்களின் புலம்பெயர்வு பல்வேறு நாடுகளை நோக்கி நடைபெற்றது. அவர்களில் பெரும்பாலானார் தமிழகம் நோக்கி புலம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 108 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் மாறுபட்ட வாழ்வில் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகின்றனர். அவற்றில் குடியுரிமை முக்கியத்துவம் பெறுகின்றது. புலம்பெயர்ந்து ஏறக்குறைய 40 ஆண்டுகள் கடந்து விட்டநிலையிலும் இன்று வரை குடியுரிமை பெறமுடியாத சூழலில் நாடற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம்5-11 பிரிவுகள் குடியுரிமையைப் பற்றி கூறுகின்றது. இந்திய குடியுரிமையை பெறுவதற்கும் உறுதி செய்வதற்கும் 1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. மேலும் இச்சட்டம் குடியுரிமை மறுப்பு பற்றி கூறுகின்றது. இதன் அடிப்படையில் ஈழத் தமிழரின் குடியுரிமை தகுநிலை பற்றிய தகவல்களை ஆராய முடிகின்றது.

**முன்னுரை:**

புலம்பெயர்வு என்பது நவீன காலத்தின் விளைவுகளில் ஒன்றாகி விட்டது. ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாட்டைச் சார்ந்த குடிமக்கள் மட்டுமின்றி பிற நாடுகளைச் சார்ந்த மக்களும் வசிக்கின்றார்கள். இந்தியாவிலும் பல நாடுகளைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரம் காரணமாக உயிரை காக்கும் பொருட்டுஅங்குவாழ்ந்த மக்கள்தன் அண்டை நாடான இந்தியாவின் தமிழகத்தில் தஞ்சமடைந்தனர். அவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் தற்காலிக மறுவாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இம் முகாம்களில் 40 ஆண்டு காலமாக வசித்து வருகின்றனர். அவர்களின் வாழ்வியலில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. குடியுரிமை என்பது பல சிக்கல்களுக்கு அடிப்படை காரணமாக அமைந்துள்ளது. இந்திய குடியுரிமையை பெறும் பொருட்டு ஈழத் தமிழர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் வழி தமிழகத்தில் வாழும் **ஈழத்தமிழரின் குடியுரிமைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.**

**ஆய்வு அணுகுமுறைகள்:**

இவ்வாய்வில் வரலாற்றியல் அணுகுமுறை, சமுதாயவியல்அணுகுமுறை, விளக்கவியல் அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகள் கையாளப்பட்டுள்ளன

***புலம்பெயர்ந்த தமிழர்கள் :***

*பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஆங்கிலேயரின் நிலவரி சீர்திருத்தம் கிராம பொருளாதாரத்தை பாதித்தது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட பஞ்சம் பல ஆண்டுகள் நீடித்ததால் பொருளாதார நெருக்கடியில் இருந்து கிராமங்கள் மீளவில்லை. இந்தச் சூழலில் காலனி நாடுகளுக்கு பஞ்சத்தில் சிக்கிய மக்களை அழைத்துச் செல்லும் நடைமுறைகளை ஆங்கிலேயர் மேற்கொண்டனர். இக்காலத்தில் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை சுமார் இரண்டு கோடி என கணிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழகத்திலிருந்து அதிக எண்ணிக்கையில் புலம்பெயர்ந்துள்ளனர். அதிலும் இலங்கைக்கு சென்றவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகும். இலங்கையை கைப்பற்றிய ஆங்கிலேயர் பெருந்தோட்ட உற்பத்தியில் ஈடுபடுத்த தமிழகத்திலிருந்து மக்களை அழைத்துச் சென்றனர். பெருந்தோட்ட உற்பத்தியில் இம்மக்களின் அயராத உழைப்பு இலங்கை நில உடமை சமூக அமைப்பில் பெரும் மாற்றங்களை நிகழ்த்த தொடங்கியது.* ***"காப்பி தேயிலை உற்பத்தியில் 100% தமிழகத்திலிருந்து அழைத்து வரப்பட்டவர்களும் அவர்களின் வாரிசுகளும் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டார்கள்."*** [1]

***"இலங்கையில் குடியேறும் மக்களுக்கு சட்ட உரிமை கொடுக்கப்பட்டு நாட்டில் சமமானவர்களாக அவர்களும் கருதப்படுவார்கள் என்று துண்டு பிரசுரங்கள் வெளியிட்டதாக நடேசய்யர் அரசாங்க சபையில் குறிப்பிட்டுள்ளார்."*** [2] *இந்நிகழ்வின் மூலம் இலங்கை பெருந்தோட்ட தொழிலில் இந்திய தமிழர்களின் உழைப்பிற்கான முக்கியத்துவத்தை பற்றி அறிய முடிகின்றது.* ***" இரு நாட்டு அரசுகளின் வாக்குறுதிகள் மூலமும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த மக்களின் உழைப்பு அவசியம் என்று கருதியே முறைப்படி அழைத்துவரப்பட்டார்கள்."*** [3] *இவ்வாறு பெருந்தோட்ட தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட மக்கள்* ***"1910 ஆம் ஆண்டு வரை கண்டிய தமிழராக அடையாளப்படுத்தப்பட்ட இவர்கள் 1910 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது இந்திய வம்சாவழி தமிழர்கள் என அடையாளப்படுத்தப்பட்டனர்"*** [4] *.அதன் பிறகு 1948 ஆம் ஆண்டு பிப்ரவரியில் இலங்கை சுதந்திரம் பெற்ற நாடாக ஆனது. 1948க்கு பிறகு இரண்டாவது நாடாளுமன்ற தொடரில் ஆகஸ்ட் மாதம் குடியுரிமை திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் பிரதமர் டி.எஸ். சேன நாயக்கர் தாக்கல் செய்தார். இதன் வழி இந்திய வம்சாவழி தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. குடியுரிமை பறிப்பு சட்டத்தை திரும்ப பெறும் வகையில் போராடும் மக்களின் வலிமை இருந்தும் அதை கையாளும் தகுதியை இழந்து நீதிமன்றத்தை நாடிச் சென்றனர்.*

***ஸ்ரீமா - சாஸ்திரி உடன்படிக்கை :***

*இந்திய வம்சாவளி தமிழர்களின் குடியுரிமை சம்பந்தமாக கடந்த 1940 இல் இரண்டு நாடுகளுக்கு இடையே தொடங்கிய பேச்சுவார்த்தை 1953, 1954 ஆகிய ஆண்டுகளிலும் நீடித்தது.* ***"1964ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் சினிமா சாஸ்திரி உடன்படிக்கை மூலம் நாடற்ற 10 லட்சம் மக்களின் தேசிய உரிமை இரண்டு நாடுகளின் பிரதம மந்திரிகளால் பேசி தீர்க்கப்பட்டு உடன்படிக்கை கையெழுத்தானது."*** [5] *அப்போதைய இலங்கை பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இந்திய பிரதமரான லால் பகதூர் சாஸ்திரிக்கும் இடையில் ஒப்பந்தம் நடைபெற்றது. இரு நாடுகளாலும் நாடற்றவர்களாக கருதப்பட்டவர்களின் குடியுரிமை உரிமை பிரச்சினை தீர்வுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதை இவ் உடன்படிக்கையின் நோக்கம் என்று இருநாட்டு தலைவர்களும் கூறிக் கொண்டனர்.* ***" இலங்கை அரசால் நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட 9,75,000பேர் இவ் உடன்படிக்கைக்கு உட்படுத்தப்பட்டார்கள். 5,25,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்வதும் மூன்று லட்சம் பேரை இலங்கை ஏற்றுக் கொள்வதும் என முடிவானது. மிகுதியாக உள்ள 1,50,000 பேரை பின்வரும் காலத்தில் இரு நாடுகளும் இணைந்து ஒரு உடன்படிக்கையை செய்து கொள்வது என்று முடிவானது. அதன்படி 1974ஆம் ஆண்டு இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி இலங்கை பிரதமர் சினிமாவோ பண்டார நாயக்க ஆகிய இருவரும் செய்து கொண்ட உடன்படிக்கையின் படி இந்திய அரசு 75,000 பேரையும் இலங்கை அரசு 75,000 பேரையும் ஏற்றுக் கொள்வது என முடிவானது."*** [6] *இலங்கையை செழிப்பாக்க உழைத்தவர்கள் நாட்டின் குடிகளாக இருப்பதற்கு தகுதி இருந்தும் சட்டத்தால் புறக்கணிக்கப்பட்டனர். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் தமிழகத்திலிருந்து சென்றவர்கள் மீண்டும் தங்களின் உடன்பிறப்புகளையும் உற்றார் உறவுகளையும் நட்புகளையும் பிரிந்து*

*தாங்கள் முன்னோரின் தாயகத்தை நோக்கி மீண்டும் புலம்பெயர்ந்தனர். இந்த ஒப்பந்தம் அம்மக்களை இந்திய குடியுரிமைபெறுவோர், இலங்கை குடியுரிமை பெறுவோர், நாடற்றவர்கள் என மூன்று கூறாகப் பிரித்தது. மேலும்* ***"இந்த உடன்படிக்கையை எதிர்ப்பவர்களின் சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும் என்று அச்சுறுத்தும் சட்டங்களை கொண்டு வந்தது"*** [7] *இலங்கை அரசு.*

***இலங்கை இன பேரினவாதம் :***

*பி.எஸ் சேனநாயக்க குடியுரிமையை பறித்தார் என்றால், 24 மணி நேரத்தில் சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்குவேன் என பண்டார நாயக்கர் செல்வா பண்டா உடன்படிக்கையை கொண்டு வந்தார். சிறிமாவோ பண்டார நாயக்க மலையக தமிழர்களை நாடு கடத்தும் உடன்படிக்கையை மேற்கொண்டார். இவ்வாறு இன மேலாதிக்க செயல்களை போட்டி போட்டு நிகழ்த்திய நிகழ்வுகளும் தொடரும் இனவாத பரப்புரைகளும் தேசிய இனங்களுக்கு இடையே பெரும் விரிசலுக்கு வழிவகுத்தன.* ***"1983இல் கருப்பு ஜூலை அல்லது ஆடிக்கலவரம் என தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பெரிய கலவரமாக கருதப்படுகிறது."*** [8] *இதன் காரணமாக ஈழத் தமிழர்கள்பல்வேறு நாடுகளில் புலம்பெயர்வு மேற்கொண்டனர். இலங்கைக்கு அருகில் தமிழகம் இருப்பதாலும் தன் முன்னோரின் தாயகம் என்பதாலும்இனமொழி பிணைப்பாலும் ஏராளமான இலங்கைத் தமிழர்கள் தமிழகம் நோக்கி பலர் புலம்பெயர்ந்தனர்.* ***"1983 முதல் 2016 வரை நான்கு கட்டங்களாக புலம்பெயர்வு நிகழ்ந்துள்ளது தமிழக மறுவாழ்வுத்துறை அலுவலகத்தின் கணக்கீட்டின்படி இக்கால பகுதியில் மொத்தம் 3,03,073 பேர் தமிழக நோக்கி வந்துள்ளனர்."*** [9] *அவ்வாறு புலம் பெயர்ந்தோர் தமிழகத்தில்108 முகாம்களில் அகதிகளாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் மீண்டும் நாடற்றவர்களாக மாற்றப்பட்டனர்.*

***குடியுரிமை:***

*குடியுரிமை என்பது ஒரு நாட்டின் குடிமகனாகவோ குடிமகளாகவோ இருப்பதற்கான உரிமையை குறிக்கும். இவ் உரிமையில் அந்நாட்டு அரசியலில் பங்கு கொள்ளும் உரிமையும் அடங்கும். குடியுரிமை சமூக ஒப்பந்த கொள்கையின் அடிப்படையில் சில பொறுப்புகளையும் கடமைகளையும் குடிமக்களிடத்தில் எதிர்பார்க்கிறது.* ***"குடியுரிமை என்பது தேசத்திற்கும் தேசத்தை உருவாக்கும் மக்களுக்கும் இடையிலான உறவை வரையறுக்கிறது. இது ஒரு தனி நபருக்கு மாநிலத்தின் பாதுகாப்பு, வாக்களிக்கும் உரிமை மற்றும் சில பொது அலுவலகங்களை நடத்தும் உரிமை போன்ற சில உரிமைகளை வழங்குகிறது."*** [10]

***இந்தியாவில் குடியுரிமை :***

*இந்திய நாட்டில்பல நாடுகளை சேர்ந்தவர்கள் புலம்பெயர்ந்து தஞ்சமடைந்து உள்ளதாலும், இந்தியர்கள் அந்நிய நாடுகளில் இருந்தமையினாலும் குடியுரிமைச் சட்டம் இயற்றுவதில் சிக்கல் நிறைந்திருந்தன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்திய முழுமைக்கும் ஒரே குடியுரிமையை வழங்குகிறது. இந்தியஅரசியல் அமைப்பு விதி 5-11( பகுதி2)குடியுரிமையைப் பற்றி பொதுவாக கூறிவிடாமல் திட்டம் தொடங்கிய நாளிலிருந்து உள்ள குடிமையை பற்றி பேசுகிறது. இது* ***"குடியுரிமை திருத்தச் சட்டம் 1986, 1992, 2003, 2005, 2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் திருத்தப்பட்டுள்ளது."*** [11]

*குடியுரிமைச் சட்டம் 1955 :*

***"குடியுரிமை என்ற பிரச்சனையை குறித்து 1955 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டது. இவ்விதி அடங்கிய சரத்துகளை பொதுவாக மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம் அவை குடியுரிமை பெறுவது, குடியுரிமை மறுப்பது, உபரி சரத்துக்கள். இந்திய குடியுரிமை பெறுகின்ற ஐந்து விதிகளை சட்டம் குறிப்பிடுகின்றது அவை பின்வருமாறு :***

1. ***பிறப்பினால்:*** *1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் தேதிக்குப்பின் இந்நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் இந்திய பிரஜை ஆவான்.*
2. ***வழியுரிமையால் :*** *1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் தேதிக்குப்பின் இந்திய நாட்டு எல்லைக்கு வெளியே பிறக்கின்ற ஒருவன் அந்நேரத்தில் அவனது*

*தகப்பன் இந்திய பிரஜையாக இருப்பனேயாகில் வழியுரிமையால் குடியுரிமை பெற்று விடுகிறான்.*

3. ***பதிவு செய்வது கொள்வதால்:*** *மேலே குறிப்பிட்ட விதிகளுக்கு ஏற்ப அல்லது சட்டத்தின் கீழ் குடியுரிமை பெறாத ஒருவன் தன்னை இந்திய பிரஜையாக பதிவு செய்து கொள்வதற்கு கீழ்க்கண்ட ஏதாவது ஒரு வகையை அவன் சார்ந்தவனாக இருக்க வேண்டும்*

- *பூர்வீக இந்திய நாட்டை சேர்ந்த ஒருவன் பிரஜையாக பதிவு செய்து கொள்வதற்கு மனு செய்வதற்கு ஆறு மாத காலத்திற்கு முன்பிருந்து இந்நாட்டில் வசித்திருக்க வேண்டும்*
- *பூர்வீகமாக இந்திய நாட்டைச் சேர்ந்தவனும் சாதாரணமாக பிளவுராத இந்திய நாட்டிற்கு வெளியில் அல்லது வெளிநாட்டில் வசிப்பவன்*
- *இந்திய குடிமகனை மணந்திருந்த அல்லது குடிமகனுக்கு மனம் செய்விக்கப்பட்ட பெண்கள்.*
- *இந்திய குடிமகனின் வயது நிரம்பாத குழந்தைகள்.*
- *முழு வயதும் செயல் திறனும் படைத்த காமன்வெல்த் நாடுகள் அல்லது அயர்லாந்து குடியரசைச் சார்ந்தவர்கள்.*

*4.**குடியுரிமையை அடையும் சலுகை பெறுவதால்:** மேலேதரப் பட்டுள்ளவைகள் யாவற்றிற்கும் புறம்பாக ஒருவன் இந்திய துரைத்தனத்தாருக்கு விண்ணப்பம் செய்து அவ் விண்ணப்பத்தையும் அவர்கள் ஏற்று சான்று வழங்கினால் குடியுரிமையை அடைந்து விடுகிறான். இவ்வாறு குடியுரிமையை சான்று பெறுவதற்கு பின்வரும் யோக்கியதாம்சங்களை பெற்றிருக்க வேண்டும்.*

- *இந்தியர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கு விருப்பமற்ற ஒரு நாட்டின் பிரஜையாக அவன் இருக்கக் கூடாது .*
- *தான் பிறந்த நாட்டின் குடியுரிமையை அவன் துறந்து இருக்க வேண்டும்*
- *மனு செய்வதற்கு முன் ஓராண்டு காலமாக அவன் இந்திய நாட்டில் வாழ்ந்து இருக்க வேண்டும் அல்லது இந்திய துரைதனத்தில் அலுவலகனாக அமர்ந்து பணியாற்றி இருக்க வேண்டும்.*

*5.புதியநாடுகளின்இணைப்பால்: ஏதாவது ஒரு நிலப்பரப்பு இந்திய நாட்டின் பகுதியாகும் எனில் அந்நாட்டு மக்கள் யாவரும் இந்திய குடிகள் ஆகிவிட்டனர் என ஏற்கலாம்.”* [12]

**குடியுரிமை இல்லாதோர்** *:*

***“இந்தியாவில் குடியுரிமை இல்லாதவர்கள் அனைவரையும் கடவுச்சீட்டு உடைய வெளிநாட்டினர், சட்டவிரோத குடியேறிகள், அகதிகள் என்று மூன்று வரையறைக்குள் கொண்டு வருகின்றனர். இந்த அகதிகளை 1939 ஆம் ஆண்டு வெளிநாட்டவர் பதிவு சட்டம் 1946 ஆம் ஆண்டு வெளிநாட்டவர் சட்டம் மற்றும் இங்குள்ள பல கடவுச்சீட்டு சட்டங்கள் முதலியவை தான் வழிநடத்துகின்றன.குறிப்பாக இச்சட்டங்கள் வெளிநாட்டவர் சட்டம் அகதிகளுக்கானது அல்ல.***

- ***இச்சட்டம் தங்களது நாடுகளில் வாழ இயலாமல் துன்புறுத்தப்பட்டு வெளியேறி வரும் அகதிகளையும்,***
- ***இங்குள்ள வேலைவாய்ப்புகள் அல்லது தொழில் வாய்ப்புகள் மூலம் தம் வாழ்க்கை தரத்தை உயர்த்துக் கொள்வதற்காக சட்டபூர்வமாகவும் சட்டபூர்வ மற்றும் வருகிற புலம்பெயர்ந்தவர்களையும்,***

- ***உரிய பயண ஆவணங்களுடன் வருபவர்களையும் வேறுபடுத்தி அணுகுவதில்லை ஒரேநிலையில் கையாளுகின்றது." [13]***

***"குடியுரிமை திருத்தச் சட்டம் 2003இல் ஜூலை 1987 வரை இந்தியாவில் பிறந்த எவரும் பிறப்பால் இந்திய குடிமக்களாக கருதப்படுவர். ஜூலை 1, 1987 அன்று அல்லது அதற்கு பிறகு பிறந்தவர்களின் பெற்றோர்களில் ஒருவர் இந்திய குடிமகனாக இருக்க வேண்டும் என்று புதிய நிபந்தனை சேர்க்கப்பட்டது. இந்த சட்டம் 2004 ஆம் ஆண்டு மீண்டும் திருத்தப்பட்டது அதன்படி டிசம்பர் 2004 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த ஒரு நபர் இந்திய குடிமகனாக கருதப்பட வேண்டும் என்றால், அவரின் பெற்றோர்களின் ஒருவர் கட்டாயம் இந்திய குடிமகனாக இருக்க வேண்டும். மற்றொருவர் இந்தியாவிற்குள் சட்ட விரோதமாக இருக்கக் கூடாது. இங்குள்ள இலங்கை அகதிகள் அனைவரும் சட்ட விரோதமாக குடியேறியவர்களாகவே, இந்திய அரசும் தமிழக அரசும் பதிவு செய்து உள்ளது இதன்படி ஈழ அகதியை இந்திய திருமணம் செய்தாலும் அவருக்கும் அவர் குழந்தைக்கு 2004 சட்டப்படி குடியுரிமை கிடையாது." [14]***

***இந்தியாவில் சட்டவிரோதமாக குடியேறியவர் :***

***இந்திய அரசியலமைப்புச் சட்டம் சட்ட விரோத குடியேரிகள் யார் என்பதை "சட்டத்தின் கீழ் சட்ட விரோதமாக குடியேறுபவர் ஒரு வெளிநாட்டவர். பாஸ்போர்ட் மற்றும் விசா போன்ற செல்லுபடியாகும் பயண ஆவணங்கள் இல்லாமல் நாட்டிற்கு நுழைகிறது, அல்லது செல்லுபடியாககாத ஆவணங்களுடன் நுழைகிறது. ஆனால் அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு அப்பால் இருக்கும் வெளிநாட்டினர் சட்டம் 1946 மற்றும் பாஸ்போர்ட் சட்டம் 1920 ஆகியவற்றின் கீழ் சட்ட விரோதமாக குடியேறுபவர்கள் சிறையில் அடைக்கப்படலாம் அல்லது நாடு கடத்தப்படலாம் சட்டவிரோதமாக குடியேறியவர் குடியுரிமை பெற விண்ணப்பிக்க தகுதியற்றவர்" [15] என்று குறிப்பிடுகின்றது.***

***குடியுரிமை திருத்தச் சட்டம் 2019 :***

*குடியுரிமை திருத்த மசோதா(CCA) 1955ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தை திருத்துவதன் மூலம் 2016 ஆம் ஆண்டு மக்களவையில் முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த மசோதா ஒரு கூட்டு நாடாளுமன்ற குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டது.அதன் அறிக்கை பின்னர் ஜனவரி 7, 2019 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. இந்த மசோதா 17வது, மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவால் 9 டிசம்பர் 2019 அன்று மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 10 டிசம்பர் 2019 அன்று நிறைவேற்றப்பட்டது.*"***இந்த மசோதாவை நோக்கங்களில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து முறையான ஆவணங்கள் இல்லாமலோ அல்லது காலாவதியான ஆவணங்களோட இந்தியாவுக்குள் இருந்து கொண்டிருக்கும் இந்துக்கள் சீக்கியர்கள்,புத்த மதத்தினர், சமணர்கள், பார்ஸிகள், கிறிஸ்தவர்கள்ஆகியோருக்கு குடியுரிமை பேரின் அடிப்படையில் குடியுரிமை வழங்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த மசோதாவின் படி அத்தகைய நபர்களை குடியுரிமைச் சட்டம் சட்டவிரோத குடியுரிகளாக பாவிக்காது. மற்றொரு விதி திருத்தம் வழியாக குடியுரிமை பேரு பெறுவதற்கான ஆண்டுகள் 11 வருடங்களில் இருந்து ஆறு குறைக்கப்பட்டுள்ளது." [16]*** *இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் ஏராளமான சட்டவிராத குடியேறிகள் நிம்மதி பெருமூச்சு விடுவார்கள் இந்திய குடிமக்களாக மாறுவார்கள்." அதேசமயம் இதே நாடுகளில் இருந்து வந்த இஸ்லாமியருக்கும் மியான்மர்நாட்டில் இருந்து வந்த இஸ்லாமியருக்கும் இலங்கையிலிருந்து குடியேறிய தமிழர்களுக்கும் குடியுரிமை மறுக்கப்படுகிறது.*

***ஐக்கிய நாடுகளின் உடன்பாடு:***

*"அகதிகளின் நிலை தொடர்பான ஐக்கிய நாடுகள் உடன்பாடு என்பது அகதி என்பவர் யார் என்பதையும் அவர்களது உரிமைகளையும் புகலிடம் கொடுத்த நாடுகளின் பொறுப்புகளையும் வரையறை செய்த அனைத்துலக உடன்பாடு ஆகும். இது டிசம்பர் 4,1952 அன்று டென்மார்க்கில் முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதுவரை 147 நாடுகள் இந்த உடன்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளன ஆனால் இந்தியா இதை ஏற்றுக்கொள்ளவில்லை" [17] ஐக்கிய நாடுகள்மாநாடு பின்வரும் இரண்டு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது அவை*

1. *"ஒரு நாட்டின் குடிமக்களும் அந்நாட்டில் இருக்கும் அகதிகளுக்கும் இடையில் கூடுமானவரை பாரபட்சம் காட்டக்கூடாது ஒரு நாட்டில் இருக்கும் அகதிகளுக்கு இடையே அவர்களின் இனம், மதம், அல்லது அவர்களின் பூர்வீக நாடு ஆகியவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டக்கூடாது.*
2. *ஒரு நாட்டில் சட்டவிரோதமாக நுழையும் அகதிகள் உள்ளே நுழைந்த உடன் உரிய அதிகார அமைப்பிடம் சரணடைந்து உரிய விளக்கம் அளித்து விட்டால் சட்ட விரோதமாக நுழைந்த குற்றத்திற்காகத் தண்டிக்கக் கூடாது.*

*என்று அகதிகள் தகுநிலை பற்றி ஐ.நா. மாநாடு சரத்து 31 கூறுகின்றது."* [18] *இந்தியா அகதிகள் மாநாடு நெறிமுறையில் கையொப்பம் விடவில்லை என்றாலும், அகதிகளுக்கு தேவையான இருப்பிடம் உணவு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்கிறது. மேலும் அகதிகளுக்கு தேவையான சமூகப் பாதுகாப்பை கொடுக்கின்றது. இருப்பினும் சட்டபூர்வமான பாதுகாப்பு தேவை என்பது ஈழத் தமிழரின் கோரிக்கையாக உள்ளது.*

***இந்திய வெளிநாட்டு குடிமக்கள் அட்டை(OCI):***

*OCI அட்டை என்பது 26 ஜனவரி 1950 அன்று இந்திய குடியுரிமை தகுதி பெற்ற அல்லது அந்த தேதியில் அதற்குப் பிறகு இந்திய குடிமகனாக இருந்த வெளிநாட்டினருக்கானது. பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் குடிமக்கள் OCI அட்டைக்கு தகுதியற்றவர்கள். ஓசியை அட்டைதாரர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. இது இரட்டை குடியுரிமை இல்லை. இந்த அட்டையை வைத்திருப்பவர்கள் இந்திய குடிமக்கள் அல்ல. OCI கார்டு என்பது இந்தியாவிற்கு வருகை தரும் பல்நோக்கு பல நுழைவு வாழ்நாள் விசா ஆகும். நீதி கல்வி மற்றும் பொருளாதார செயல்களில் OCI கார்டை கொண்டு பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவர்களால் இந்தியாவில் விவசாய நிலங்களை கையகப்படுத்த முடியாது போன்ற நெறிமுறைகளை பின்பற்றி இந்த அட்டையை பெற்று பயன்படுத்தி வருகின்றனர்.*

***குடியுரிமை குறித்த ஈழத் தமிழரின் நிலைப்பாடு :***

*தமிழகத்தில் வாழும் ஈழத் தமிழர்கள் இந்திய குடியுரிமை பெறும் பொருட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.* ***"ஒப்பந்தப்படி கடைசி கப்பலான ராமானுஜம் 1984 இல் இந்தியாவிற்கு வந்தது. ராமானுஜம் கப்பலில் வந்தவர்களிடம் இருந்து ஆவணங்களின்படி 64 நபர்களை ஒன்று திரட்டி மக்கள் கண்காணிப்பகம் ஹென்றி திபேன் மூலமாக உலகநாதன் என்பவர் குடியுரிமை கேட்டு 2009இல் உயர் நீதிமன்றத்தை நாடுகிறார் இதற்கு முன்பும் அதிகாரிகள் மட்டத்தில் குடியுரிமை கேட்டு முயற்சி செய்து அது கிடைக்காத நிலையில் இறுதியில் தான் நீதிமன்றத்தை நாடினார்கள்."*** [19] ***இந்த வழக்கில் தீர்ப்புக்கு பின்னான நிலை அகதிகளுக்கு சாதகமாக அமையவில்லை. அதன் பிறகு "குடியுரிமைக்கு இணையம் மூலம் தான் விண்ணப்பிக்க வேண்டும் என்று நிலை இருக்கிறது அதில் கோரப்படும் ஆவணங்கள் அகதிகளிடம் முழுமையாக இல்லை அகதிகள் கூட்டாகவே குடியுரிமை கூறி விண்ணப்பித்திருக்கிறார்கள் இதில் நடைமுறை சிக்கல்கள் நிறையவே இருக்கின்றன. இறுதியில் சட்ட விரோத குடியேறிகளாய் இருப்பதால் குடியுரிமையை மறுப்பதாக மத்திய அரசு கூறியதாக சொல்லப்படுகிறது."*** [20]

*1986 இல் மண்டபம் அகதிகள் முகாமில் நளினி என்பவர் பிறந்திருக்கின்றார். சின்ன சேலம் பகுதியில் உள்ள அகதிகள் முகாமில் வாழ்ந்திருக்கிறார். இங்கு நளினியின் பள்ளிப்படிப்பை நிறைவு செய்திருக்கின்றார். அதன்பின் 2013ல் திருமணமாகி கணவன் வசிக்கும் கொண்டகப்பட்டு இடைத்தங்கல் முகாமிற்கு வந்திருக்கின்றார். 2019 அகதிகள் குறித்த தீர்ப்பு வந்தபோது வழக்கறிஞர் ரோமியோ உதவியுடன் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்காக இந்திய கடவுச்சீட்டு வேண்டும் என விண்ணப்பித்துள்ளார். மூன்று முறை விசாரித்த பின்பு கடவுச்சீட்டு வழங்க மறுத்து விட்டார்கள். வழக்கறிஞர் ரோமியோ ஆலோசனையின் படி உயர்நீதிமன்றத்தை நாடி உள்ளனர் நளினி கிருபாகரன். இந்திய குடியுரிமைச் சட்டம் 1955மூன்றாம் பிரிவில் 20,01,1950 முதல் ஒன்று ஏழு 1987 வரை இந்தியாவில் பிறக்கும் எல்லா குழந்தைகளுக்கும் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு நளினிக்கு கடவுச்சீட்டு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. "08.04.2021 அன்று உயர் நீதிமன்றத்தில்வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. ஆகஸ்ட் 2022-ல் தீர்ப்பு நளினி கிருபாகரனுக்கு*

*சாதகமாக கிடைத்தது." இதேபோன்று சிவகங்கை மாவட்டம் ஜன்னல் குடி இலங்கைத்தமிழர் மறுவாழ்வு முகாமை சேர்ந்த நேயா டைட்டஸ் என்பவருக்கும் இந்திய கடவுச்சீட்டு வழங்க கோரி சென்னை உயர் நீதிமன்ற கிளையை நாடினார். அவருடைய தாய்இந்தியாவை சேர்ந்தவர் என்ற முறையில் இவரும் இந்திய குடிமகன் என தீர்ப்பளித்து அவருக்கு மூன்று வாரங்களுக்குள் கடவுச்சீட்டு வழங்க உத்தரவிடப்பட்டது. இவர்கள் தற்போது முழுமையான இந்திய குடிமக்கள் இவர்களைப் போல் நூற்றுக்கணக்கானவர்கள் முகாம்களில் வாழ்கிறார்கள் என்று இப்பதிவுகளைப் படைப்பாசிரியர் தொ. பத்தினாதன் பதிவு செய்துள்ளார்.*

*முடிவுரை*

*சிறப்புமிக்க நீண்ட இந்திய வரலாற்றில் அரசியலமைப்பு சட்டம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. பல வகையான மக்களின் உரிமைகளையும் தேவைகளையும் கருதி உருவாக்கப்பட்டது. அதில் குடியுரிமை என்பது இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி உடன் கூடிய மத்திய மாநில என்ற இரட்டை அரசை கொண்டிருந்தாலும் ஒற்றை குடியுரிமையைக் கொண்டுள்ளது. மாநிலங்களுக்கு என்று தனி குடியுரிமை இல்லை. 1955 இல் ஏற்படுத்தப்பட்ட குடியுரிமைச் சட்டம் ஆறு முறை திருத்தப்பட்டு 2019ல் குடியுரிமை திருத்தச் சட்டமாக வெளியிடப்பட்டது. இதில் ஏற்கப்படும் குடியுரிமை மற்றும் மறுக்கப்படும் குடியுரிமை பற்றி கூறப்பட்டுள்ளது. சட்டவிரோத குடியேரிகளுக்கு குடியுரிமை மறுக்கப்படுகின்றது. இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழர்கள் "சட்டவிரோத குடியேரிகள்" என்று மத்திய அரசும் மாநில அரசும் பதிவு செய்துள்ளது. எனவே இந்தியாவில் வசிக்கும் ஈழத்தமிழர்களுக்கும் குடியுரிமை மறுக்கப்படுகின்றது. இருப்பினும் 40 ஆண்டுகளாக நாடற்ற நிலையில் வாழும் ஈழத் தமிழர்கள் தங்களின் குடியுரிமைக்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். குழுக்களாக தங்கள் முறையிட்டை அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இந்நிலையில் தனிநபராக இணைய மூலம் விண்ணபிக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது இதற்கு தகுந்த ஆவணங்கள் இல்லாமையால் குடியுரிமைக்காக விண்ணப்பிப்பது சிக்கல் நிறைந்த ஒன்றாக உள்ளது. இருப்பினும் பிறப்பால் குடியுரிமை மற்றும் பெற்றோரின் வழி குடியுரிமை என்ற அடிப்படையில் நளினி மற்றும் டைட்டஸ் போன்றோர் கடவுச்சீட்டு பெற்றுள்ளமை அவர்களின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி ஆகும். இவர்களைப் போன்று குடியுரிமை பெறுவதற்கு தகுநிலை கொண்ட ஈழத் தமிழர்கள் தங்களுக்கும் குடியுரிமை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் அகதி என்ற நிலை எப்போது மாறுமோ?நாடற்றவர் என்ற நிலை எப்போது மாறுமோ? என்ற வினாக்களுடனே வாழ்ந்து வருகின்றனர்.*

**மேற்கோள்கள்:**


1. *சிதைக்கப்பட்ட மலையக தமிழர்கள், மு.சி கந்தையா, ப. 79*
   *பொன்னுலக புத்தக நிலையம். 4/413, பாரதியார் நகர்,மூன்றாவது வீதி,பிச்சப்பாளையம், திருப்பூர் 641603. முதல் பதிப்பு- மே 2022 வெளியீடு*
2. *மேலது. ப. 104*
3. *மேலது. ப. 105*
4. *மேலது*
5. *மேலது . ப. 181*
6. *மேலது. ப. 186*
7. *மேலது. ப. 187*
8. *பிபிசி மார்ச் 2018*
9. *தகிப்பின் வாழ்வு (போரும் இடம்பெயரும்) தொ.பத்துனாதன், ப.10 காலச்சுவடு பப்ளிகேஷன் கே. பி.சாலை, நாகர்கோயில் -629001*
   *முதல் பதிப்பு ஜனவரி 2019,*
10. *https://byjus-com.translate.goog/free-ias-prep/citizenship-amendment-bill-2019இப்படி உரிமை திருத்தச் சட்டம் 2019*
11. *https://byjus-com.translate.goog/ias-questions/how-many-times-was-the-citizenship-act-1955-amended/ குடியுரிமைச் சட்டம் 1915*
12. *இந்திய அரசியலமைப்பு, ஆசிரியர் எம். வி.பைலி, பக் -80,81*

*தமிழாக்கம் தி. வெ.குப்புசாமி, தமிழ்நாடு வெளியீட்டு கழகம் தமிழ்நாடு அரசாங்கம். First Edition April-1967*

13. *https://keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-கி.நடராசன் ( கட்டுரை) 27 டிசம்பர் 201குடியுரிமைச்சட்டத்திருத்தம், ஈழ அகதிகள்*
14. *மேலது*
15. *https://byjus-com.translate.goog/ias-questions/how-many-times-was-the-citizenship-act-1955-amended/ குடியுரிமை சட்டம் 1955*
16. *அகதியின் துயரம், வி. சூரியநாராயணன், ப. 122 தமிழில் பெர்னார்ட் சந்திரா, வெளியீடு காலச்சுவடு பப்ளிகேஷன், கே. பி. சாலைநாகர்கோவில்-629001*
    *முதல் பதிப்பு 2021*
17. *தமிழகத்தின் ஈழ அகதிகள்(கட்டுரை)தொ. பத்தினாதன்பதியப்பட்டது நவம்பர் 23 2013 காலச்சுவடு பதிப்பகம்.*
18. *https://keetru.com/index.php/2014-03-08-04-35-27/கி.நடராசன்( கட்டுரை) 27 டிசம்பர் 2019*
19. *நீதிமன்ற தீர்ப்புகளும் இலங்கை அகதிகளும் காலச்சுவடு, தொ. பத்தினாதன், (கட்டுரை)ப .19*
    *volume :35 இதழ் 281, மே 2023*
20. *மேலது பக் -20*

********* ********* ********** ********* ********* ********** ********** **********